Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.188/2025

| | |
|---|---|
| | Prosecution PW- 1 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | வசந்தகுமார் |
| Father's Name | : | முருகன் |
| Village | : | பாகநத்தம் |
| Taluk | : | கரூர் |
| District | : | கரூர் |
| Age | : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 24.03.2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது பாகநத்தம் செல்வம் நகரில் குடியிருந்து மெக்கானிக்கல் இன்ஜினியராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர்கள் என்னுடைய ஊரைச் சேர்ந்தவர் ஆவார். கடந்த 3 வருடத்திற்கு முன்னால் இரவு 7 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு வெளியே சத்தம் கேட்டது.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

2) நான் வெளியே வந்து பார்த்தபோது கூட்டமாக இருந்தது. கூட்டத்தில் தள்ளுமுள்ளு ஏற்பட்டு கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர் குச்சியால் என்னை அடித்ததில் எனக்கு காயங்கள் ஏற்பட்டது அதற்காக நான் கரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த போலீசார் ஒரு வெள்ளை பேப்பரில் என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்படுகிறார்.**

<u>அரசு தரப்பு குறுக்குவிசாரணை</u>

1) புகாரிலும், போலீசார் விசாரணையிலும் கடந்த 25.09.2022ம் தேதி மாலை சுமார் 06.45 மணியளவில் நானும் எனது அம்மாவும் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்த போது குடிபோதையில் அங்கு வந்த ஆனந்தராஜ் எனது அம்மாவிடம் பிரச்சனை செய்து கொண்டிருந்தார் என்றும், நான் ஆடு செடியை கடித்தற்கு நான் தானே பேசினேன் எதுகரு நான் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து எனது அம்மாவிடம் வந்து பிரச்சனை செய்யுற என்று கேட்டேன் என்றும், அதற்கு ஆஜர் எதிரி என்னை தகாத வார்த்தைகளால் திட்டி எதிரி இடுப்பில் வைத்திருந்த அரிவாளை எடுத்து என்னை பின் தலையில் வெட்டினார் என்றும், எதிரி பின் தலையில் வெட்டியதில் எனக்கு ரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் ஆஜர் எதிரிகள் எனக்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் அவர்கள் அடித்ததில் எனக்கு காயங்கள் ஏற்பட்டதால் இருசக்கர வாகனத்தின் மூலம் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சையில் இருந்தேன் என்றும், பின்னர் மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் பெற்றேன் என்றும்,

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

அப்போது அங்கு வந்த போலீசாரிடம் ஆஜர் எதிரி மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி என்னுடைய ஊர்காரர் என்பதாலும் அவருடன் நான் சமாதானம் ஆகிவிட்டேன் என்பதாலும் அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.188/2025

| | |
|---|---|
| | Prosecution PW- 2 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | சத்தியமூர்த்தி |
| Father's Name | : | தண்டபாணி |
| Village | : | பாகநத்தம் |
| Taluk | : | கரூர் |
| District | : | கரூர் |
| Age | : | 25 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 24.03.2026.

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது செல்வம் நகரில் குடியிருந்து அவன் பிளாஸ்ட் பைப் கம்பெனியில் மேலாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய ஊாரை சேர்ந்தவர். **என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது.** போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

**சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்படுகிறார்.**

**அரசு தரப்பு குறுக்குவிசாரணை**

போலீசார் விசாரணையிலும் கடந்த 25.09.2022ம் தேதி மாலை சுமார் 06.45 மணியளவில் பெரியப்பா மகனும் அவரது அம்மாவும் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்த போது குடிபோதையில் அங்கு வந்த ஆனந்தராஜ் பெரியம்மாவிடம் பிரச்சனை செய்து கொண்டிருந்தார் என்றும், பெரியப்பா மகன் ஆடு செடியை கடித்தற்கு நான் தானே பேசினேன் எதுகது நான் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து எனது அம்மாவிடம் வந்து பிரச்சனை செய்யுற என்று கேட்டார் என்றும், அதற்கு ஆஜர் எதிரி என்னை தகாத வார்த்தைகளால் திட்டி எதிரி இடுப்பில் வைத்திருந்த அரிவாளை எடுத்து வசந்தகுமாரை பின் தலையில் வெட்டினார் என்றும், எதிரி பின் தலையில் வெட்டியதில் வசந்தகுமாருக்கு ரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் ஆஜர் எதிரிகள் வசந்தகுமாருக்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் அவர்கள் அடித்ததில் வசந்தகுமாருக்கு காயங்கள் ஏற்பட்டதால் இருசக்கர வாகனத்தின் மூலம் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சையில் இருந்தார் என்றும், பின்னர் மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு ருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் பெற்றார் என்றும், அப்போது அங்கு வந்த போலீசாரிடம் ஆஜர் எதிரி மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் வாக்குமூலம் கொடுத்தார் என போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.188/2025

| | | |
|---|---|---|
| | | Prosecution PW- 3 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | மனோகரன் |
| Father's Name | : | சண்முகம் |
| Village | : | வெங்கமேடு |
| Taluk | : | கரூர் |
| District | : | கரூர் |
| Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 24.03.2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது வெள்ளியணை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.09.2022ம் தேதி வெள்ளியணை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக சத்தியபிரியா பணியில் இருந்தபோது காலை 11.00 மணி யளவில் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை புறக்காவல் நிலையத்திலிருந்து வரப்பெற்ற தகவலின் பேரில் திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வசந்தகுமார் என்பவரிடமிருந்து பெற்று வந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலைய குற்ற எண்.284/2022, ச.பி.294(பி),324,506(2) இ.த.ச படி வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) அன்றைய தினம் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி சாட்சிகள் முன்னிலையில் 1.15 மணிக்கு சம்பவ இடத்தில் கிடந்த அரிவாளை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரில் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தொடர்ந்து 1 முதல் 5 வரை சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரி ஆனந்தராஜ் கரூர் அமர்வு நீதிமன்றத்தில் பிணையம் பெற்று சென்றதால் கைது நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை.

3) பின்னர் வசந்தகுமாருக்கு முதலுதவி சிகிச்சையளித்து மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து அந்த மருத்துவமனை மருத்துவரின் கருத்துரைப்பெற்று வசந்தகுமாருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என காயச்சான்றிதழ் வழங்கிய கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் பூங்குழலி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 மற்றும் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வசந்தகுமாருக்கு மேல்சிகிச்சையளித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய மருத்துவகருத்துரை வழங்கிய திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் பிரபு என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **விபத்து பதிவேட்டுடன் கூடிய கருத்துரை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

4) கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **படிவம் 91 அ.சா–ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அரிவாள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் உதவி ஆய்வாளர் புலன் விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றாலும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்கான ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நாள், நேரம், இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக எவ்வித சான்றுப்பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**